# 7 அதிரடிப் படையினர் புலிகளால் சுட்டுக் கொலை


விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 82 கார்த்திகை 18 ஜ: அவ்வல் பிறை: 16 இதழ்: 223

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-12-1990


## அம்பாறையில் சம்பவம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலினால் ஏழு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர் பல உத்தியோகத்தர்கள் பலத்த காயமடைந்தனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அறங்கடவல பதியத்தலாவ வீதியில் வீதித்தடைகள் அகற்றிக் கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்திடீர்த் தாக்குதலைத் தொடர்ந்து வீதியில் நின்ற படையினர் தற்பாதுகாப்பான பகுதிகளுக்குள் ஓடிமறைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

சேமமடுவில்

## ராணுவத்தை சுற்றிவளைத்து புலிகள் கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வவ்னிப்பகுதியில் சேமமடு என்னுமிடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சுற்றி வளைத்து விடுதலைபபுலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் மாலை 4-00 மணி தொடக்கம் 6-00 மணிவரை இரு மணித்தியாலயங்கள் புலிகளின் சுற்றிவளைப்பில் இராணுவத்தினர் நிலைதடுமாறினார்கள். (ரி-வி)

# தமிழக முதல்வர் கருணாநிதி

# ஈழத் தமிழர் பிரச்சனை குறித்து

# இந்தியப் பிரதமருடன் பேச்சு

## 3|4 மணிநேரம் சந்திப்பு நடைபெற்றது

(சென்னை)

**தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி இந்தியப் பிரதமர் திரு. சந்திர சேகரை நேற்று புதுடில்லியில் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.**

புதுடில்லியிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் முக்கால்மணிநேரம் இருவருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் பின்னர் தமிழகமுதல்வர் திரு. கருணாநிதி பத்திரிகையாளர் மத்தியில் பேசிய போது இப்பேச்சுக்கள் குறித்து திருப்தி தெரிவித்தார்.

''இலங்கை பிரச்சனை சம்பந்தமாக 1983-ம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஏற்பட்டுள்ள பல்வேறு சூழ்நிலைகளையும் தமது அரசு பொறுப்பேற்றவுடன் இது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் பிரதமருடன் எடுத்துரைத்ததாகவும் அவர் கூறினார்.

தமிழக கடலோரகாவல் படையினருக்கு ஏ. கே. 47

(4-ம் பக்கம் பார்க்க)

ஓய்வூதியம் பெறுவோருக்கும்

## விசேட அலவன்ஸ்

(கொழும்பு)

புதிய வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட விசேட அலவன்ஸ் தொகை ஓய்வூதியம் பெறுபவருக்கும் வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சம்பளஉயர்வு சகல ஓய்வூதியகாரர்களுக்கும் ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படும். (ச)

யாழ். மாவட்டத்தில்

## பட்டினிச் சாவை நோக்கி 50,000 மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஐம்பதினாயிரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கம் நடத்திய கணிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய நிதிவசதி இல்லாமையினால் இந்தத் தொழிலா

(4-ம் பக்கம் பார்க்க)

## விசர்நாய்க்கடி மருந்து வந்தது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு விசர்நாய்க் கடித்தடுப்பூசி மருந்து வந்து சேர்ந்துள்ளது.

சிலமாதங்களாக இவ்வைத்தியசாலையில் விசர்நாய்க்கடி மருந்துக்குத்தட்டுப்பாடு நிலவியமையால் இது சம்பந்தமான நோயாளர்கள் பலவித கஸ்டமடைந்துவந்தனர். (52)

விடுதலைப் புலிகள்

## நடமாட்டம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

### தமிழக இந்திரா காங்கிரஸ் நடவடிக்கை

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு இந்திரா காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு.வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடலோரமாவட்டங்களின் தலைவர்கள் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள் குறித்து வரையறை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தலைவர்கள், நாடாளுமன்றம், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரின் கூட்டங்கள் நேற்றுச் சென்னையில் நடைபெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

குவைத்திலிருந்து திரும்பியவர்களுக்கு

## தொழில் பயிற்சி

(கொழும்பு)

குவைத்தில் இருந்து வேலையிழந்து திரும்பியவர்களுக்கு தொழில் பயிற்சிவழங்க அரசாங்கம் நாறூற்றி ஐம்பது கோடிரூபாவை ஒதுக்கியுள்ளது:

இப் பயிற்சி நிலையங்கள் நாடு பூராவும் அமைக்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (ச)

கண்காட்சியை

## ஒன்றரை லட்சம் பேர் பார்வையிட்டனர்

(பண்டத்தரிப்பு)

யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்று வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றுக் கண்காட்சியை இதுவரை சுமார் ஒன்றரைலட்சம் மக்கள் பார்வையிட்டுள்ளார்கள்.

இக் கண்காட்சி இம்மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது.

கைலாசபதி கலையரங்கத்தில் கடந்தசனிக்கிழமையன்று நடைபெற்ற வீடியோ படக்

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசி, மாவுக்குப் பதிலாக

## உழுந்து,பருப்பு விநியோகம் ஆணையாளருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

சில ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகளில் தற்போது வழங்கப்பட்டுவரும் இலவச உணவு விநியோகத்தில் அரிசி, மா போன்ற உலர் உணவுகளுக்கு பதிலாக உழுந்து பருப்பு ஆகிய பொருட்கள் வழங்கப்படுவதாகவும், மண்ணெண்ணை இலவசமாக வழங்கப்படாமல் காசுக்கு வழங்கப்படுவதாக சில புகார்கள் வந்துள்ளதாக யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி செ. இன்பஜோதி நித்தியராஜ் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## 5 தமிழருக்கு பதவி உயர்வு

(பருத்தித்துறை)

இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்புக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் பதவி உயர்த்தப்பட்டவர்களில் பின்வரும் தமிழர்களும் அடங்குவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது: திரு. ஏ ஜெயரட்ணம், திரு. கே. பரமேஸ்வரன் திரு. எஸ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### போட்டோஸ்ரட் பிரதி

தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் எல்லா வகையான அளவுகளிலும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில், யாழ்ப்பாணம். (ஏ 910)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-4158)

### பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப்பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 9 - 12 - 90 ஞாயிறு மு. ப. 8.00 மணிக்கு 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், அரசடி, கொக்குவில் மேற்கு (மக்கள் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆகிய முகவரிகளில் நடைபெறும். நடந்து முடிந்த புலமைப்பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். (சி4157)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# இராணுவ நடவடிக்கையால் 2000 மீனவ குடும்பங்கள் தொழிலின்றி பெரும் அவதி

(காங்கேசன்துறை)

''அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்டு பட்டினிச்சாவின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ள மீனவமக்களுக்கு மீனவ முத்திரை, கடல்வலைய நிவாரணம் போன்றநிவாரண உதவிகளை உடன் வழங்குக''

இவ்வாறு மயிலிட்டி கிராமியகடற்றொழில் சமூக அபிவிருத்திஅமைப்புமீன்பிடிஅமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேராவிடம் கோரியுள்ளது.

மேற்படி அமைப்பின் தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் இதுதொடர்பாக அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த 2000 மீனவக்குடும்பங்கள் அண்மைக்கால இராணுவநடவடிக்களால் தமது தொழிலையும் இருப்பிடங்களையும்விட்டு இடம்பெயர்ந்து மிகவும்கஷ்ட நிலையில் வாழ்வதாகவும் அம்மகஜரில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, புனர்வாழ்வு அமைச்சர், யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (86)

## 1,200 ரூபா அலவன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் மாணவர்களுக்கான கடந்த 5 மாத அலவன்ஸ் ரூபா 1,200 பணமாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலை சிறுப்பர் காரியாலயத்தில் மேற்படி பணம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க)

## ஷெல் தாக்குதலால் அகதி முகாம் மூடப்படுகிறது

(மாங்குளம்)

முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்டுவரும் ஷெல் தாக்குதல்களால் அங்கிருந்த திருமலை அகதிகள் முகாம்கள் மூன்றாக குறைக்கப்பட்டுள்ளது.

திருமலை அகதிகள் குமுளமுனையில் இரு முகாம்களிலும் வற்றாப்பளையில் ஒரு முகாமிலும் மொத்தமாக 370 குடும்பங்கள் இருந்துவருகின்றன.

இவர்களுக்கான நிவாரணம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவருவதாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. கந்தசாமி தெரிவித்தார். (150)

## உதவிப்பணம் கிடைத்தது

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கைச் சேர்ந்த புற்றுநோயாளிகள், தொழுநோயாளிகள், காசநோயாளிகளுக்கு மாதந்தோறும் அரசினால் வழங்கப்படும் உதவிப்பணத்தை வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் யாழ். செயலகத்திலிருந்து பெற்றுக் கொண்டுவந்து ரொக்கப் பணமாக வழங்கினார்.

அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களை அடுத்து கடந்த ஜூன் மாதம் முதல் இவர்களுக்கான உதவிப் பணம் தபாற் கந்தோர்கள் மூலம் வழங்கப்படாமையால் இந்நோயாளிகளிகள் பெரும் கஷ்டப்பட்டுவந்தனர்.

இவர்களது கஷ்டத்தை உணர்ந்த உதவி அரசாங்க அதிபர் யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டு ஜூன், ஜூலை மாதங்களுக்கான உதவிப்பணத்தை ரொக்கமாகவழங்கினார். (139)

## 1990-ம் ஆண்டுக்கான ஆயுள்வேத மருந்துகள் இதுவரை கிடைக்கவில்லை

(கொக்குவில்)

உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ். மாவட்டத்தில் உள்ள 24 ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு 1990ம் ஆண்டுக்கான மருந்து வகைகளை ஆயுள்வேத கூட்டுத்தாபனம் இதுவரை வழங்கவில்லை.

உடனடியாக மருந்து வகைகளை பெறுவதற்கு மேற்கொண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால அவர்கள் யாழ் மாவட்ட செஞ்சிலுவைச்சங்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் மருந்துகள் பெற ஏற்ற ஒழுங்குகள் செய்து வருவதாக அறியப்படுகின்றன. (135)

## மில்க்வைற் மரக்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் மரவளத்தை விருத்திசெய்யும் 1990ம் ஆண்டு திட்டத்தின்கீழ் மில்க்வைற் தொழிலகத்தினரால் உருவாக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான மரநாற்றுக்கள் இலவசமாகவழங்கப்பட்டுள்ளன,

தமிழீழ ஆய்வு நிறுவனம் உட்பட பலபொது நிறுவனங்களுக்கு இந்த தொழிலகம் நாற்றுக்களை வழங்கியுள்ளது.

## சிரமதானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மாவீரர் வாரத்தையொட்டி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஒருநாள் சிரமதானத்தினைமேற்கொண்டது. அன்று பொதுமக்கள் இரத்ததானமும் செய்தனர். (52)

## திறந்த பல்கலைக்கழக டிப்ளோமா விண்ணப்பம்

(அராலி)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் 1990/91ம் கல்வி யாண்டுக்கான பட்டமேற் படிப்பு டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிறவுண் வீதியிலுள்ள யாழ். பிராந்திய நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

காசுக்கட்டளையானது 'பதிவாளர்' இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நுகேகொட'' என்ற முகவரிக்கு எடுக்கப்படல் வேண்டும் எனவும் இவைதொடர்பான விபரங்களைப்பெற இம்மாதம் பத்தாம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி முடிவுற்ற போதிலும தற்பொழுதே விண்ணப்பப் படிவங்கள் யாழ். பிராந்திய நிலையத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

## சிறந்த சேவையாளர்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலய உப அதிபர் திரு. சாமுவேல் பெனடிற் இன்று 4-ம் திகதி தமது 40 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஒய்வு பெறுகின்றார். மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலயம், பேசாலை பாத்திமா வித்தியாலயம், நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை, அவிசாவளை சென். மேரிஸ் கல்லூரி, மாதகல் மேற்கு அ.மி.த. க. பாடசாலை ஆகிய பல்வேறு பாடசாலைகளில் கற்பித்த இவர் பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தில் 13 வருட காலம் உதவி அதிபராக பணியாற்றினார்.

இவர் கத்தோலிக்க வாரஏடான சத்திய வேத பாதுகாவலனிலும் மற்றும் வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்மணி, ஈழநாடு ஆகியவற்றிலும், தமிழக சஞ்சிகைகளிலும் நீண்ட காலமாக பல்வேறு கத்தோலிக்க சமயக்கட்டுரைகளையும், ஆக்கங்களையும் எழுதிவந்துள்ளார். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தில் பல பதவிகளை வகித்த இவர் யாழ். மறைக்கல்வி நிலையம், திருவழிபாடு ஆகிய நிறுவனங்களின் சமயப் பணிகளிலும் தமது பங்களிப்பைச் செலுத்தி வந்தார்.

தமிழ்த்தூது அருட்திரு. தனிநாயகம் அடிகளாரின் செயலாளராக மூன்றாண்டு காலம் இருந்து அடிகளாரின் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் ஆகியவற்றை சிறப்பாக உருவாக்கிக்கொடுத்துள்ளார், வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் போட்டிகள் நடைபெற்ற காலங்களில் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், அறிவிப்பாளராகவும் பணியாற்றியுள்ள திரு. சாமுவேல் பெனடிற் பொதுப்பணி, கத்தோலிக்க சமயப்பணி, ஆசிரியப்பணி ஆகியவற்றில் நீண்ட காலம் தமது முத்திரைகளை பதித்து சேவையாற்றி அனைவரது அபிமானத்தையும் பெற்றுள்ளார்

-பண்டத்தரிப்பு நிருபர்

## காவலூர் இராணுவம் தொடர்ந்து ஷெல் தாக்கு

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும்ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

மக்கள்வாழும் பகுதிகளில் நாளாந்தம் ஷெல்கள் ஏவப்படுவதினால் அச்ஷெல்குண்டுகள் அப்பகுதிகளில் வந்து விழுந்து வெடிக்கிறது: இந்நிலைகளினால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் எந்தநேரத் என்ன நடக்குமோஎன அஞ்சுகின்றார்கள்.

மேலும் இந்நடவடிக்கை இவ்வாறிருக்க அப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தினருக்கு பாதுகாப்பாக காரைநகர் கடற்படையினரின் பல விசைப்படகுகளும் பீரங்கிப் படகுகளும் ரோந்து சுற்றித் திரிகின்றன.

அப்படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (101)

## உதவி அரசாங்க அதிபரின் துரித நடவடிக்கையால் தாமதம் நீங்கியது

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபரின் துரித நடவடிக்கைகளால் காரைநகரைச் சேர்ந்த பொதுமக்கள் உலர் உணவுப் பொருட்களைத் தாமதமின்றிப் பெற்றுவருகின்றனர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த காரைநகர் பகுதி அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளாலும் பொம்மர், ஹெலி தாக்குதல்களினாலும் இயங்காதிருந்தது: ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகம் இயங்காமையினால் வலிகாமம் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் காரைநகர்ப் பிரிவுக்கு பதிற்கடமை புரிந்ததனால் அங்குள்ள பொதுமக்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

காரைநகர் மக்களுக்குரிய நற்சான்றுப்பத்திரங்கள், பங்கீட்டு அட்டைகள் முதலான அவசிய கருமங்களையெல்லாம் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்களே செய்து வருகின்றார். இவரின் சிறந்த சேவை குறித்து பொதுமக்கள் பாராட்டுகின்றனர். (139)

## போராளிகள் குடும்பத்திற்கு உணவுப்பொதி அன்பளிப்பு

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வலிவடக்குப் பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப்போரில் பங்கு கொண்டு மரணித்த போராளிகளின் குடும்பங்களுக்கு உணவுப்பொதிகளை வழங்கி வருகிறது.

மாவீரர் நாளை முன்னிட்டு இதுவரை 60க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த உணவுப்பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் போராளிகளின் குடும்பங்களின் விபரங்களைச் சேகரித்து அவற்றுக்கும் இந்த உணவுப் பொதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (86)

## வாரத்திற்கு ஒருமுறை 500 ரூபா கொடுப்பனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சேமிப்பு வங்கியில் வாரத்திற்கொருமுறை 500 ரூபா வீதம் வாடிக்கையாளர்களுக்கு பணம்வழங்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை இலங்கை வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு எந்தவிதமான பணமும் வழங்கப்படுவதில்லை.

கடந்த 5 மாதங்களாக பணக்கொடுப்பனவுகள் இல்லாததால் மக்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (52)

## பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்

(கொழும்பு)

இறக்குமதியாளர்களால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சகல உணவுப் பொருட்களும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ச)

## விசேடகூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான விசேட கூட்டம் 7-ம் திகதி காலை 10 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். அனைவரும் நவம்பர் மாதத்தில் நடத்திய சேவைக்காலக் கல்வி வகுப்பில் பங்குபற்றிய ஆசிரியர்களின் வரவு இடாப்பு, வவுச்சர்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## அட்டாளைச்சேனை அரங்கேற்றம்

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இன்று வரை ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து வந்த அரசுகள் ''தமிழ் இனத்துக்கு முடிவுகட்டும்'' முடிவுகளை எடுப்பதில் அதிவிஷேட அக்கறை காட்டி வந்துள்ளன.

வடக்கு கிழக்கில் உற்பத்தித் துறைகளில் சாதனை படைத்த தொழிற்கூடங்கள், உயர் கல்வி பீடங்கள் முதல் தமிழ் இனத்தின் முன்னேற்றத்துக்கு நத்தை வேகத்திலாவது உதவும் நிறுவனங்களைக் கூட முடங்க வைப்பது மூடுவிழா நடாத்துவது அல்லது அவற்றைஇடமாற்றி நிலைதடுமாறச் செய்வது போன்ற தந்திரோபாயங்களை நிறைவேற்றுவதில் அரசுகள் பல வெற்றிவாகை சூடியுள்ளன.

காரைநகர் சீநோர் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு நேர்ந்த அதேகதி, பலாலி, மட்டக்களப்பு தமிழ்ஆசிரியர்களுக்கான விஞ்ஞான பயிற்சி நெறிகளுக்கு இடமாற்றம்என்னும்ரூபத்தில் நேரவுள்ளது.

அரசியல், சமூக நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தில் பல ஆண்டு காலமாக நீடித்து இயங்கி பயிற்சி நெறிகளை அந்தர அவசரமாக அட்டாளைச் சேனைக்கு மாற்ற கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. தமிழரின் கல்வி வளர்ச்சிக்கு குந்தகமான அரசின் திட்டமிட்ட சதிச்செயல் என்று தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. மகாசிவம் கண்டனக்குரல் எழுப்பியுள்ளார்.

அரசின் திட்டமிட்ட வேலையாக இப்பயிற்சிப் பிரிவு இடமாற்ற உத்தரவு நோக்கப்படுகிறது. தமிழரின் கல்விக்கண்களைக் குத்தி. குருடாக்கி அவர்களதுநிலையைஅவலமாக்கும், நாடகத்தின் தொடர் அத்தியாயம் அட்டாளைச் சேனையில் அரங்கேறவுள்ளது.

இந்த ஒரவஞ்சக நாடகத்தின் கௌரவ நடிகர்களாகவேனும், வேடமேற்காது கல்விஅமைச்சு என்ற இயக்குநரின் புதிய தயாரிப்பு நாடகத்தை முற்று முழுதாக புறக்கணிக்க தமிழ் இனத்தின் தவப்புதல்வர்களாகப் பிறந்து விஞ்ஞான மதிநுட்ப ஆசிரியர்களாக மலரவிரும்பும் புத்திஜீவிகள் உறுதிபூண வேண்டும்.

— மயூரன்

## தொண்டமான் ஆலோசனை

(கொழும்பு)

தமிழர்கள் மத்தியில் இந்திய தமிழர், இலங்கைத் தமிழர் என்ற பேதம் இருக்கும்வரை தமிழர் பிரச்சனை தீரப்போவதில்லை. நாம் தமிழர் என்ற நிலை உருவாகும்வரை இந்நிலை தொடரும்''.

இவ்வாறு சிறுகைத்தொழில் உல்லாசத்துறை அமைச்சர் சௌ. தொண்டமான் நேற்று முன்தினம் சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவு தினக் கூட்டத்தில் தெரிவித்தார். (ச)

# பங்களாதேஷில் அவசரகால நிலை

# ஆட்சி மாற்றத்திற்கு வழிசமைக்குமா?

## நிலைமையை எடுத்துக்கூற பத்திரிகைகள் இல்லை

பங்களாதேஷில் கடந்த மூன்றுண்டு காலமாக நடைபெற்றுவரும் அரசு எதிர்ப்பு கிளர்ச்சிகள் சிலதினங்களாக எல்லையைக் கடந்து புதிய உத்வேகம்பெற்றுவருகின்றது. டாக்கா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து புத்திஜீவிகள் அனைவரும் ஏர்ஷாத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் நிலையை பங்களாதேஷில் உருவாக்கியுள்ளது. நிலைமை மோசமாகஜனாதிபதி ஏர்ஷாத் நாட்டில் அவசரகால நிலையை கடந்தவாரம் பிரகடனப்படுத்தியுள்ளதால் மேலும் நிலைமை மோசமாகியுள்ளது.

ஜனாதிபதியின் அவசரகால நிலைப்பிரகடனத்தால் சட்டத்தையும் மீறி பல்கலைக்கழக மாணவர்கள் தினமும் ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதால் பொலிஸார் கண்ணீர்புகை பிரயோகத்தையும், துப்பாக்கி பிரயோகத்தையும் மேற்கொண்டு வருவதாலும் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டு இருக்கின்றது.

எதிரணிகள் அரசின் அடக்கு முறைக்கு எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதால் பங்களாதேஷின் பொருளாதாரம் என்றுமில்லாத வகையில் மோசமடைந்து வருகின்றது. அரசாங்க ஊழியர்கள் பணிக்குச் செல்லாமல் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்வதால் கிளர்ச்சிகளை அடக்க பொலிஸாரால் முடியாது இருக்கிறது.

பங்களாதேஷ் உலகில் மிக வறியநாடு, உலக நாடுகளின் பெரும் உதவியை பெறும் நாடு, பிரிட்டன் ஐம்பத்தைந்து மில்லியன் பவுண்ஸ்சை வருடாந்தம் உதவியாக வழங்குவதால் இன்றைய பங்களாதேஷ் நிலையை பிரிட்டன் பலமாக கண்டித்துள்ளது; தேவையேற்படின் உதவி நிறுத்தப்படுமென பிரிட்டன் எச்சரித்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி ஏர்ஷாத் பெயர்குறிப்பிடாது இந்தியாவை காரசாரமாக

### ஸச்சி

கண்டித்துள்ளார். ''அயல் நாடொன்று தனது நாட்டில் அமைதியை குலைத்து ஜனநாயகத்துக்கு ஆபத்தை விளைவிக்க சதிசெய்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார் இதனை இந்தியா கண்டிக்கவில்லையாயினும் ஜனாதிபதி எர்ஷாத் இந்தியாவை பெயர் குறிப்பிட்டு பேசவில்லையென சமாதானம் கூறியுள்ளது.

பங்களாதேஷின் பத்திரிகையாளர்கள் அனைவரும் அவசரகால நிலை நீக்கப்படும் வரை பத்திரிகைகள் வெளிவராதென அறிவித்து களத்தில் குதித்துள்ளனர். மருத்துவர்கள் கடமையைச் செய்ய மறுத்து வருகின்றனர். ஊர்வலத்தில் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். சுருங்கச்சொன்னல் இன்றைய நிலையில் பங்களாதேஷில்இராணுவ சட்டத்தை பிரகடனப்படுத்துவதை தவிர அரசுக்கு வேறுவழியிருப்பதாகத் தெரியவில்லை.

இன்றைய நிலையில் ஜனநாயக மீட்பு போராட்டங்களை நடாத்தியவர்கள் அனைவரினதும் வரலாறுகளை நோக்கும் போது பங்களாதேஷில் விரைவில் ஆட்சி மாற்றம் நிகழும் என்பதில் ஐயமில்லை. பர்மாவில், நேபாளத்தில், பல்கேரியாவில், பிலிப்பைன்ஸில், நிகழ்ந்த கடந்த கால நிகழ்வுகளை நாம் உதாரணமாக கொள்ளலாம்.

# இந்திய அரசுடன்பேசபஞ்சாப் தீவிரவாதிகள் இணக்கம்

## ஜெனிவாவிற்கு அழைப்பு

(புதுடில்லி)

இந்திய அரசுடன் பஞ்சாப் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடாத்த பஞ்சாப் தீவிரவாதிகள் முன்வந்துள்ளனர். இப்பேச்சுக்கள் ஜெனிவாவில் நடைபெறவேண்டுமென்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

பஞ்சாப்பில் காலிஸ்தான் தனிநாடுகோரி கடந்த பல வருடங்களாக ஆயுத போராட்டம் நடைபெற்று வருகிறது. இதை அடக்க அரசு மேற்கொண்ட எந்த நடவடிக்கையும் பயனற்றுப் போய்வருகிறது.

புதிதாக பதவியேற்றுள்ள பிரதமர் திரு. சந்திரசேகர் நிபந்தனையற்ற முறையில் தீவிரவாதிகளுடன் பேச தயார்என அறிவித்திருந்தார். இதையடுத்து காலிஸ்தான் தீவிரவாதிகளும் பேச்சுக்கள் நடாத்த இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாப் பிரச்னை குறித்து காலத்திற்குகாலம் மாறும் இந்திய பிரதமர்களின் வித்தியாசமான கொள்கைகளாலேயே நிலைமைமோசமடைந்ததாகவும், தாம் திரு. சந்திரசேகருடன் பேச்சுக்கள் நடத்த முன்வந்தபோதிலும் 'காலிஸ்தான்' தனிநாடுகோரிக்கையை கைவிடப்போவதில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவில் இப்பேச்சுக்களை நடாத்த தீவிரவாதிகள் தயாராயிருப்பதாக விடுத்த அறிவிப்பிற்கு இதுவரை இந்திய அரசிடமிருந்து பதிலெதுவும் வரவில்லையென்றும் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## ஏற்றுமதிக் கிராமங்கள்

(கொழும்பு)

ஐரோப்பிய பொருளாதார சமூகம் சகல மாவட்டங்களிலும் ஏற்றுமதிக் கிராமங்களை அமைக்க இருபத்தேழு கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

உற்பத்தியாளர்களுக்குநல்ல விலையைப் பெற்றுக்கொடுக்கவும் அதிக லாபத்தைப்பெறவும் இவ் ஏற்றுமதிக் கிராமங்களை அரசாங்கம் நிறுவியுள்ளது. [ச]

## இராசி பலன்

04-12-1990

செவ்வாக்கிழமை

துதியை மு. ப. 9-54வரை, திருவாதிரை ந. இ. 11-40 வரை, மரணயோகம். இராகு காலம் மாலை 3 15 முதல் 4-45 வரை, நல்லநேரம் 10-45 முதல் 12-15 வரை.

மேடம் - தொழில்துறை பாராட்டு. வெற்றிவாய்ப்பு, குடும்ப மகிழ்ச்சி, சுப விஜயம்.

இடபம்- காரியத் தாமதம், இனசனவருகை, புதியமுயற்சி, ஆடம்பரம்.

மிதுனம்-தொழில் லாபம், திருமண யோகம், காரியசித்தி, குடும்பத்தில் குதூகலம், பெருமை.

கடகம்-கடும்யோசனை, தாய்வழி கவலை, குடும்ப விரோதம், அகால போஜனம்.

சிங்கம்-உறவு மேன்மை, தொழில்குறைவு. பொருளாதார மேம்பாடு, குடும்ப ஒற்றுமை.

கன்னி-பொதுப்பணி, பெரியோர் ஆசி, குடும்ப ஒற்றுமை, படபடப்பு.

துலாம்- நம்பிக்கையின்மை, அந்நியர்பகை, குடும்பக்கவலை, புத்திரர் பிரச்சனை.

விருச்சிகம்- போராட்ட உணர்வு. கடன்படல். குடும்பச் சச்சரவு, சகோதரர் பகை.

தனுசு-குடும்பமகிழ்ச்சி, பணவரவு. இனசனவருகை, விருந்துபசாரம், விவேகமானமுடிவு.

மகரம். காரிய டலிதம், பயணங்களால் நன்மை, சொத்துத் தகராறு, குடும்பத்தில் சுபகாரியம்.

கும்பம்- வேண்டாத உறவு, சகோதரர் உதவி, பயணங்களால் அலைச்சல், மனச்சுமை.

மீனம்-விரக்திநிலை, தொழில் கஸ்டம், குடும்பக்கவலை, பொருளாதார மந்தம்.

ஜோஸ்யர்.

## நிலைமை மோசமடைந்தால் உதவி நிறுத்தப்படும்

### பிரிட்டன் எச்சரிக்கை

(டாக்கா)

பங்களாதேஷில் ஜனநாயகத்திற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் ஏற்படின் அதற்கான சர்வதேச உதவிகள் நிறுத்தப்படும் என ஜனாதிபதி எர்ஷாத்தை பிரிட்டிஷ் அரசு எச்சரித்துள்ளது.

பங்களாதேஷில் கடந்த பல வருடங்களாக அரசுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருவதும் அதனை ஒடுக்க இராணுவச் சட்டம் அமுலாவதும் தெரிந்ததே. இந்த நடவடிக்கைகளால் கடந்த சில வருடங்களில் சுமார் 5000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்தே பிரிட்டன் மேற்படி எச்சரிக்கையைவிடுத்துள்ளது. பங்களாதேஷிற்கு அதிகளவு நிதி உதவியை வழங்கும் மூன்றுவது நாடு பிரிட்டன் ஆகும். கடந்த வருடம் 55 லட்சம் பவுண்ஸ் நிதியை வழங்கியுள்ளது.

கடந்தவாரம் நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டபின் பெரும் கலவரங்கள் இடம்பெற்று வருவதும் இவ்வன்முறையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## மீட்பு நிதி மீளளிப்பு

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பகுதியிலிருந்து தமிழீழ மீட்பு நிதி வழங்கிய 12 குடும்பங்கள் கடந்த 27ம் திகதி மாவீரர் தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிப்பொறுப்பாளர் திரு. றஞ்சித் அப்பாவிடமிருந்து தமிழீழ மீட்பு நிதியை மீளப்பெற்றுள்ளனர்.

இத்தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு வைபவம் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. சிற்றூரவை உறுப்பினர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர். (52)

## இணைந்த ஜெர்மனியின் ஆட்சியை ஹெல்மட் ஹோல் கைப்பற்றினர்

(பொன்)

இணைந்த ஜெர்மனியின் முதலாவது சுதந்திர பொதுத் தேர்தலில் முன்னாள் மே. ஜெர்மன் அதிபர் தலைமையிலான கூட்டணி அமோக வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

660 இடங்களிற்கு நடைபெற்ற இத்தேர்தலில் திரு. ஹெல்மட்ஹோலின் தலைமையிலான 'கிறிஸ்தவ ஜனநாயகக் கூட்டணி 400க்கும் மேற்பட்ட இடங்களை கைப்பற்றியுள்ளதாக முடிவுகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு, மேற்கு ஜெர்மனிகள் அண்மையில் இணைந்தபின் நடைபெற்ற முதலாவது தேர்தல் இது. இதன்மூலம் அடுத்த நான்கு வருடங்கள் திரு. ஹெல்மட் ஹோல் ஆட்சியிலிருக்க தகுதிபெற்றுள்ளார்.

திரு. ஹெல்மட் ஹோலை எதிர்த்து போட்டியிட்ட வேறு கூட்டணிகள் படுதோல்வியடைந்துள்ளன. இந்தவெற்றி மூலம் இணைந்த ஜேர்மனி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டதாக திரு. ஹோல் தெரிவித்துள்ளார். (சி)

அகதிகளுக்கு தேவையான —

# உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களிலுள்ள அகதிகளுக்கு தேவையான அரிசி, மா, சீனிபோன்ற உலர் உணவுப்பொருட்களை ப. நோ. கூ. சங்க களஞ்சியங்களில் போதியளவு ஒதுக்கீடுசெய்து வைப்பதென யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரசசார்பற்ற திறுவனங்களின் கூட்டத்தில் யாழ். அரச அதிபரால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் திறுவனங்கள் இனிமேல் யாழ். செயலகத்துடன் இணைந்து அகதிகள் நிவாரணவேலைகளை மேற்கொள்ளவுள்ளன.

அகதிகளுக்கு அரசுவழங்கும் உணவுப் பொருட்கள் தவிர்ந்த மற்றைய பொருட்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கவிருக்கிறது. (153)

கிழக்கு மாகாண —

## பல்கலைக்கழகமாணவருக்கு உலர் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிழக்குமாகாண மாணவர்களுக்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலையமும், ஒட்டுமடம் மெதடிஸ் திருச்சபையும் கடந்தவாரம் இலவசமாக உலர்உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

113 மாணவர்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் ஒரு மாணவருக்கு தலா 350 ரூபா பெறுமதியான உலர் உணவுகளை வழங்கியது.

ஒட்டுமடம் மெதடிஸ் திருச்சபை மேற்படி மாணவர்களுக்கு ஒரு மாணவருக்கு தலா 200 ரூபா பெறுமதியான உலர் உணவுகளை வழங்கியது. (153)

## அதிபர் ஆசிரியர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கொத்தணியைச் சேர்ந்த சகல ஆசிரியர்கள் அதிபர்களையும் நாளை 5-ந் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு வருமாறு காங்கேசன்துறை கொத்தணி அதிபர் கே. இராஜதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார். (153)

## வலி-வடக்கு ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்டத்தைச் சேர்ந்த வலி-வடக்குத் பகுதிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பண்டத்தரிப்புச் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நேற்றுத் தொடக்கம் ஒப்பமிட்டுத் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (153)

## இலவச மதிய உணவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாண மாணவர்களுக்கு, திருநெல்வேலி சைவ வித்யா அபிவிருத்திச் சபை நேற்று முதல் இலவச மதிய உணவு வழங்கிவருகிறது.

சுழற்சி முறையில் மற்றைய மாணவர்களுக்கு இலவச உணவு மேற்படி சபையினால் வழங்கப்படவிருக்கின்றது. (153)


# Patrician Institutes

## தொழினுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. COMPUTER PROCESSING COURES
   I. Computer Programming in Basic Language and Disk operating System
   Duration: 3 Months
   II. Word Processing (Word Star 2000 & 4000)
   Duration: 3 Months
   111. Lotus 123/Spread Sheet Analysis Duration: 3 Months
   COMMENCING: 10-12-90.
   LECTURERS: Mr. S. R. Logendra, D. C. A. (Systems Analyst) and Miss. M. Varatharajah, Management Accountant passed finalist C. I. M. A. (London)

EQUIPMENT USED: Laser XT/2, XT/3, 386 (IBM Compatibles) and Apple II Computers

பின்வரும் பயிற்சி நெறிகளும் எதிர்வரும் 10-12-90 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

2. CITY AND GUILDS OF LONDON INSTITUTE
   Quantity Surveying 6 Months
3. Diploma Course in Draughtsmanship 6 Months
4. Short hand and Typing தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் (6 மாதகால பயிற்சி)
5. Electrical Wiring மின்சார இணைப்பு (3 மாதகால பயிற்சி)
6. Motor Mechanism மோட்டார் மெக்கானிசம் (6 மாதகால பயிற்சி)
7. Motor Winding மோட்டார் வைன்டிங் (4 மாதகால பயிற்சி)
8. Lathe Operation கடைச்சல் இயந்திர இயக்கம் (3 மாத காலப் பயிற்சி)
9. Arc Welding மின் ஒட்டு வேலை (3 மாத காலப் பயிற்சி).

★ மேற்படி பயிற்சி நெறிகளில் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை பெற்று உடன் பதிவு செய்துகொள்ளவும்.

★ விண்ணப்ப முடிவுத் திகதி 08-12-90.

★ கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

★ கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது முழுக் கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்கு குருவானவரின் (Paris Priest) சிபார்சின் பேரில் அவர்களுக்கு சலுகைக் கட்டண வசதி செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர்
பற்றிஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்.

REGISTAR
Patrician Institutes of Higher Studies
59, St. Patrick's Road
JAFFNA.

(ஏ 911)


உலக சுகாதார தின —

# சித்திரப் போட்டியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதாரதின கண்காட்சியும், சித்திரபோட்டியும் 1991ம் ஆண்டு ஏப்ரல் 07ந் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவுகளை சுய கண்ணோட்டத்தில் சித்திரமாக வரைந்து உலகமறியச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இடைத்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நடுவர்கள் குழுவினரால் தரமானதெனக் கணிக்கப்படும் சித்திர படைப்புக்கள் மேற்படி கண்காட்சியில் வைக்கப்படவுள்ளது.

1991-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி மேற்படி சித்திர போட்டியின் முடிவுத் திகதியாகும். 18வயதுக் குட்பட்டவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் ஸ்பெயின் நாட்டில் செவிலி நகரில் நடைபெறவுள்ள எக்ஸ்போ 92 காட்சி அரங்கில் அனைத்துலக செஞ்சிலுவை செம்பிறை இயக்கத்திலும் இடம்பெற வாய்ப்புண்டு என்றுதெரியவருகிறது. (153)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் மூன்றும் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கான சகல பூர்வாங்க ஏற்பாடுகளையும் யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (153)

## விடுதலைப்புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இக்கூட்டத்தில், விடுதலைப் புலிகள், ஆளும் கட்சியினரின் துணையுடன் தமிழகக் கடலோரப் பகுதியில் நடமாடுவதாகப் பலர் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் கூறியதாகவும் திரு. வாழப்பாடி தெரிவித்தார்.

புலிகளின் நடமாட்டத்தை ஆதாரங்களுடன் எடுத்து, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. சுபோதிகான் சஹாய் சென்னை வரும்போது அவரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர் கூறினார். (ரி)

## தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரக துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், துணைப்பிரதமர் திரு. தேவிலால் ஆகியோரரையும் அவர் சந்தித்தார். (ரி)

## அரிசி, மாவுக்குப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் இலவச உணவுப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக தேவையான அதியாவசியப் பொருட்கள் யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால் பொதுமக்கள் உணவு விநியோகத்தில் ஏதாவது புகார்கள் வந்தால் உடனடியாக யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகிய என்னிடமோ அல்லது பிரிவு உதவி அரசாங்க அதிபர்களிடமோ அறிவிக்கலாம் என்று யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி மேலும் தெரிவித்தார். (153)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.


## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுடுலையைச் சேர்ந்த செ. செல்வரஞ்சன் நேற்று அலரிவிதையை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இவர் ஒரு மினிபஸ் சாரதியாவர். (153)

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாநகர சபையில் கடமையாற்றிய திரு. வி. தேவதாஸன் வலி தென் மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரியாக இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 5 தமிழருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோமசுந்தரம் திரு. எஸ். ரீ. மார்க்கண்டு, திரு. கே. மாணிக்கவாசகர். (52)

## பாதுகாப்புநிதி 20 கோடி ரூபா

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் இதுவரையும் 20 கோடி ரூபா நிதி பாதுகாப்பு நிதிக்கு சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுக்கு நிவாரணமாக மாற்றுத்திட்டம் செய்து கொடுக்க முடியாதுள்ளதாகவும் மேற்படிச் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிலில்லாத நிலையினால் இந்தத்தொழிலாளர்களை நம்பியிருக்கும் பல குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளன என்றும் சங்கம் அச்சம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த மீனவர் குடும்பங்களும் யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்துள்ளதுடன் இவர்களும் வருமானம் ஏதுமின்றி பாதிப்படைந்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இவர்களுக்கு மாற்றுத் திட்டம் ஊடாக வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மேற்படி சங்கம் கேட்டுள்ளது. (ரி-வி)

## கண்காட்சியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சியின்போது கொக்காவில் முகாம் தாக்குதல், மன்னார் கொண்டச்சிமுகாம் தாக்குதல். யாழ். கோட்டையில் புலிக்கொடி நாட்டல் போன்ற நிகழ்ச்சிகள் திரையிட்டு காண்பிக்கப்பட்டன. கண்காட்சி 7-ம் திகதி முடிவடைந்த பின்னரும் சனி, ஞாயிறு தினங்களில் வீடியோ படக்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன தொடர்ந்தும் நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சி மன்றத்தினர் தெரிவித்தனர்.

அண்மையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதல் பற்றிய வீடியோ படக்காட்சியும் அடுத்தவாரம் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (82)